IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.304/2018
DEPOSITION OF WITNESS

பி.வா.சா. 1 சாட்சி ஜெயராஜ் த.பெ. அக்கினி

**Solemnly affirmed and sworn by Thiru.S.Sadhu Siva Subramanian, Additional District Munsif on 12.06.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் சரியாக தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். விபரங்களை யார் கூறினார் என்றால் வழக்கறிஞர்தான் கூறினார். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள 17 ஆவணங்களை பற்றி தெரியுமா என்றால் பட்டா, பத்திரம் போன்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம்.

2. மேற்படி பட்டா, பத்திரம் தவிர வேறு ஆவணங்கள் என்ன தாக்கல் செய்தோம் என்று தெரியாது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கின் சொத்து விபரத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் பாறைப்பட்டி கிராமத்தில் உள்ளது.

3. வழக்குச் சொத்து கொக்குளம் கிராமத்தில் உள்ளது என்றால் தவறு என்றால் கொக்குளம் பஞ்சாயத்திற்குட்பட்ட இடத்தில்தான் உள்ளது. தாவாச் சொத்து எத்தனை சென்டு என்றால் ஞாபகம் இல்லை. வாதி முத்துராதா எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு அவர் யார் என்றே தெரியாது. வழக்குச் சொத்து சக்கரை, சிவணான்டிக்கு

பாத்தியப்பட்ட பூர்விக சொத்து என்றால் சரியல்ல, சிவணான்டித்தேவருக்கு மட்டும் பாத்தியப்பட்டது. வழக்குச் சொத்து மொக்கை சிவணான்டித்தேவர் மற்றும் வெள்ளைச்சாமித்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4. மேற்படி வெள்ளைச்சாமித்தேவருக்கு வைரம் சிவணான்டித்தேவர் மற்றும் சக்கரை பின்னத்தேவர் என்ற இரண்டு மகன்கள் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி மகன்கள் உள்ளார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. தாவாச் சொத்து எங்களது முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்து என்றால் சரிதான். மேற்படி சக்கரை பின்னத்தேவருக்கு ராஜுபாண்டி, அக்கினி, பசும்பொன், சந்திரபோஸ், சுதந்திரம் ஆகிய வாரிசுகள் உள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5.1963 ஆம் ஆண்டு முதல் வெள்ளைச்சாமித்தேவருக்கு தாவாச் சொத்து பாத்தியப்பட்டு அவரது மகனான சக்கரை பின்னத்தேவருக்கு ஒதுக்கப்பட்டு அதிலிருந்து வாதியும், வாதியின் கணவரும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாவாச் சொத்தை அனுபவம் செய்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை அனுபவம் செய்து வந்ததற்கான எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. தாவாச் சொத்தை பொறுத்து வாதிகளுக்குத்தான் முழுஉரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து எங்களுக்கு பாத்தியமானது என்றாலும், எதிரிடை பாத்தியம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் தாவாச் சொத்து எங்களுக்கு பாத்தியம் ஆகும்.

தாவாச் சொத்தை பற்றிய விபரங்கள் எனக்கு முழுவதும் தெரியாமல் சாட்சியம் அளிக்க தகுதியான நபர் இல்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை பொறுத்து வாதிகள் தான் முழுஉரிமையாளர் என்றால் சரியல்ல.

7. பிராதுப்படி பிராதில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.06.12 17:18:07 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.